வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

கும்மிடிப்பூண்டி

வழக்கு எண் : CC 197 / 2022 காவல் நிலையம் : DCB திருவள்ளூர்

வழக்கு சாட்சி : PW 1

நாள் : 17.04.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் ∘ | : | சண்முகம் | ஜாதி | : | |
| தந்தை /கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் ∘ | : | | சமயம் | : | |
| தாலுக்கா ∘ | : | | வயது | : | |

(எதிரிகள் A1, A2 ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் புதுகும்மிடிபூண்டியில் பூர்வீகமாக வசித்துவருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்து கடந்த ஆகஸ்டு மாதம் 2013ம் வருடம் ஓய்வு பெற்று விட்டேன். கேசவன் என்பவர் என்னுடைய சொந்தக்காரர் ஆவார். அவர் என் மகன் விக்னேஷ்வரனுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளர் வேலை வாங்கித்தருவதாக சின்னக்கருப்பன் என்னிடம் 15லட்சத்தை கேட்டார். மேற்படி சின்னக்கருப்பனை எனக்கு என்னுடைய சொந்தக்காரரான மேற்படி கேசவன் மூலமாக தெரியும். மேற்படி சின்னக்கருப்பன் என்பவர் மேற்படி தொகையை என்னுடைய வீட்டிற்கு வந்து 31.09.2014ம் தேதி கேட்டார். அப்போது மேற்படி சின்னக்கருப்பனிடம் முதல் தவனையாக 4 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன். பின்னர் 2வது தவனையாக மேற்படி அதே வருடத்தில் அக்டோபர் மாதத்தில் மற்றொரு 4 லட்சத்தை அதே என்னுடைய வீட்டில் வைத்து மேற்படி சின்னக்கருப்பனிடம் ரொக்கமாக கொடுத்தேன். பின்னர் மேற்படி சின்னக்கருப்பன் வேலை வாங்கிதருவதாக சொல்லி மீதி 7 லட்சத்தை கொடுங்கள் என்று என்னிடம் கேட்டார். எனவே மேற்படி அதே வருடத்தில் டிசம்பர் மாதத்தில் 7 லட்சம் ரொக்கத்தை என்னுடைய வீட்டில் வைத்து மேற்படி சின்னக்கருப்பனிடம் கொடுத்தேன். பின்னர் மேற்படி வேலை சம்பந்தமாக அவர் வேலைக்கான உத்தரவை வாங்கித்தருவதாக என்னிடம் சொல்லி என்னை சென்னைக்கு வரசொன்னார். பின்னர் வேறு ஒரு நாள் சென்னைக்கு வரசொன்னார் பின்னர் நான் அவருக்கு போன் செய்தபோது அவரிடமிருந்து முறையான பதில் இல்லை. பின்னார் மேற்படி சின்னக்கருப்பனின் ஊரான மதுரைக்கு நேரில் சென்று அவருடைய வீட்டில் வைத்து நான் அவரிடம் வேலைக்காக கொடுத்த பணத்தை திருப்பிக்கேடடேன். அப்போது அவர் நான் அவரை சும்மா தொல்லை செய்தால் அவர் பிரச்சனை செய்துவிடுவதாக என்னிடம் சொன்னார். அதன்பின்னர் அவரிடம் நான் மேற்படி நான் கொடுத்த பணம் சம்பந்தமாக நான் கேட்கவில்லை. மேலும் மேற்படி சின்னகருப்பன் என் மகனுக்கு மின்சார துறையில் வேலைவாங்கி தருவதாக சொல்லி பணத்தை பெற்றுக்கொண்டு வேலை வாங்கிதராமல் ஏமாற்றிவிட்டார. எனவே நான்

திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கடந்த 2015ம் வருடம் (தேதி, மாதம் ஞயாபகமில்லை) புகார் கொடுத்தேன். அந்த புகார்  என்னிடம் காட்டப்படுவது தான் அது அ.த.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்படி நான் கொடுத்த 15 லட்சமானது நான் ஓட்டுனர் பணியில் இருந்த ஓய்வு பெற்றபோது எனக்கு கிடைத்த பணமாகும். என் மகன விக்னேஷ்வரன் என்பவர் Electranic and Communication Engineer என்ற பட்டப்படிப்பு முடித்துள்ளார். மேலும் மேற்படி நான் சின்னக்கருப்பனுக்கு 15லட்சம்  கொடுத்த சின்னக்கருப்பனை அடையாளம் காட்ட முடியும். (கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி சின்னக்கருப்பனின் அடையாளம் குறித்து ஆட்சபேனை இல்லை என நீதிமன்றத்தில் வாய்மொழியாக எடுத்துரைக்கிறார்.) நான் கொடுத்த புகார் சம்பந்தாக காவல் ஆய்வார்ள என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனவும் தனது மூத்த வழக்கறிஞர் தான் குறுக்க விசாரணை செய்ய வேண்டும் என்று கூறினார்.